**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 93 of 2024

Deposition of witness for { Prosecution PW4
Defence
Court

Name : ரமேஷ்குமார்
Father Name : முருகன்
Village : மல்லாங்கிணறு
Taluk : காரியாபட்டி
Caste :
Calling :
Religion :
Age : 40

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

நான் தற்போது மல்லார்கிணறு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2022ம் தேதி காரியாபட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது அன்று நானும், சார்பு ஆய்வாளர் ஆனந்தஜோதி, முதல்நிலைக்காவலர் சிவபாலன், பெண் முதல்நிலை காவலர் வனிதா ஆகியோருடன் புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதை தடுப்பது சம்பந்தமாக ரோந்து சென்ற போது காரியாபட்டி இந்தியன் வங்கி அருகில் உள்ள பெட்டி கடை அருகே 1ம் எதிரி ஆண்டிச்சாமி நின்று கொண்டிருந்தார் எங்களை கண்டதும், தப்பி ஓட முயற்சித்தபோது அவர் கையில் வெள்ளை சாக்கு இருந்தது. அதில் 4 பவுச்சு கணேஷ் 701 புகையிலை இருந்தது. அவரிடம் விசாரித்தபோது அவர் மேற்படி புகையிலையை 2ம் எதிரி

மீனாட்சியிடம் வாங்கி விற்பதாக கோரினார். நாங்கள் 2ம் எதிரி மீனாட்சி கடைக்கு வந்து விசாரித்தபோது 2ம் எதிரி மீனாட்சி அவரது கடையில் வைத்திருந்த கணேஷ் 701 புகையிலை 5 பவுச்சுகள், கூலிப் 7 பவுச்சுகள் ஆகியவற்றை தானாக முன்வந்து எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி புகையிலை பொருட்களை சார்பு ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக கையொப்பம் செய்ய முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் சிவபாலனும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் . அது **அ.சா.ஆ.2** ஆகும். சம்பவ இடத்தில் வைத்து மேற்படி புகையிலை பொருட்களை பகுப்பாய்வு செய்வதற்காக மாதிரி எடுத்து பின்பு அந்த புகையிலை பொருட்களை பகுப்பாய்வுக்காக தடவியல் அறிவியல் ஆய்வகம், இராமநாதபுரத்திற்கு அனுப்பி வைத்தோம். பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் நிலையத்தில் இருந்து 14.30 மணிக்கு ரோந்து சென்றோம். காரியாபட்டி– அருப்புக்கோட்டை ரோட்டின் இடதுபுறம் இந்தியன் வங்கி உள்ளதா என்றால் திசை தெரியவில்லை. காவல் நிலையத்தில் இருந்து இந்தியன் வங்கி சுமார் 5 மீட்டர் துரம். அந்த இடத்தை சுற்றி ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். இந்தியன் வங்கி அருகில் வைத்து சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்யவில்லை. அந்த இடத்தில் வைத்து 1ம் எதிரியிடம் வழக்கு பொருட்களை வாங்கினோம். இந்தியன் வங்கிக்கும் 2ம் எதிரி கடைக்கும் இடையே சுமார் 1கி.மீ தூரம் இருக்கும். 1ம் எதிரியை சோதனை செய்யவில்லை. 2ம் எதிரியையும் சோதனை செய்யவில்லை. கைபற்றிய பொருட்களுக்கு பட்டியல் எதுவும் தயார் செய்யவில்லை. படிவம்–91

காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் அனைத்தும் பேக்கிங் செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிரி மீனாட்சி அருகே அத்தாட்சி தயார் செய்தோம். அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் எழுதினாரா என்றால் யார் எழுதினார் என்று தெரியவில்லை. என்னுடன் வந்த 3 நபர்களில் ஒருவர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும் அதனால் தான் அத்தாட்சி எவ்வாறு தயார் செய்யப்பட்டது என்று என்னால் கூறஇயலவில்லை என்றால் சரியல்ல . சார்பு ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சம்பவம் இடத்தில் வைத்து பார்வைமகஜர் வரைபடம் தயார் செய்தாரா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.